

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு, தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் திமுக கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான 'தலைவர் 72' மாபெரும் பகல் இரவு கிரிக்கெட் போட்டி நடந்தது. இதில் தகவல் தொழில்நுட்ப அணி உடன் மகளிர் அணி மோதின. இதில் தகவல் தொழில்நுட்ப அணி வெற்றி பெற்றது. விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்பி, மற்றும் சபரீசன் கோப்பையை வழங்கினர். உடன் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, எம்.பி.கள் கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கபாண்டியன், முன்னாள் எம்.பி. பார்த்திபன், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு, பூச்சி முருகன், சுபேர்கான், பகுதி செயலாளர்கள் காமராஜர், எஸ்.மதன்மோகன், மாநிலத் துணைச் செயலாளர்கள் மகேந்திரன், சேகர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு, தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் திமுக கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான 'தலைவர் 72' மாபெரும் பகல் இரவு கிரிக்கெட் போட்டி நடந்தது. இதில் விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி மோதின. இதில் விளையாட்டு மேம்பாட்டு அணி வெற்றி பெற்றது. விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்பி, மற்றும் சபரீசன் கோப்பையை வழங்கினர். உடன் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, எம்.பி.க்கள் கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கபாண்டியன், முன்னாள் எம்.பி. பார்த்திபன், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு, பூச்சி முருகன், சுபேர்கான், பகுதி செயலாளர்கள், காமராஜர், எஸ். மதன்மோகன், மாநிலத் துணைச் செயலாளர்கள் மகேந்திரன், சேகர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# 2026 தேர்தலில் வெற்றி பெற்றிட பணியை இன்றே தொடங்குங்கள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை... 4ஆம் பக்கத் தொடர்ச்சி

ஓபிஎஸ் அணி, புதிதாக இப்போது ஒரு அணி இருக்கிறது. அதுதான் செங்கோட்டையன் அணி. ஆனால், ஒன்றே ஒன்று மட்டும் சொல்கிறேன். அத்தனையும் நிச்சயமாக தேர்தல் நேரத்தில் பா.ஜ.க.வோடு ஐக்கியமாகிவிடும். அவர்கள் எல்லாம் ஒரே அணியில் சேர்ந்து விடுவார்கள். அதனால் நாம் அலட்சியமாக இருக்கக் கூடாது.

**தமிழ்நாட்டு மக்கள் துணை!**

2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஒன்றாக வந்தார்கள். நாம் எல்லாம் ஒன்றாக சேர்ந்து தமிழ்நாட்டு மக்கள் துணையோடு துரத்தி அடித்தோம். ஒன்றாக வந்ததால்தானே நீங்கள் வெற்றி பெற்றீர்கள் என்று சொன்னார்கள். 2024-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பிரிந்து வந்தார்கள். அப்போதும் நாம் அத்தனை பேரும் சேர்ந்து தமிழ்நாட்டு மக்களின் துணையோடு துரத்தி அடித்து இருக்கிறோம்.

வர இருக்கின்ற 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நிச்சயமாக கூட்டணியாகத்தான் வருவார்கள். ஆனால், எத்தனை புது அணிகள் வந்தாலும் நிச்சயமாக தேர்தல் களத்தில் வெற்றி பெறப்போவது நம் திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான, நம் தலைவரின் தலைமையிலான நம் தி.மு.க கூட்டணி என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். எனவே, நமது சாதனைகளை திட்டங்களை தினமும் மக்களிடம் எடுத்துக்கொண்டு சென்று பேசுங்கள்.

தேர்தலுக்கு முன்பாக, நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வாக்காளரையும் குறைந்தது நான்கு அல்லது ஐந்து முறை நேரில் சந்தித்து பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்களிடம் பேசுங்கள். பொதுமக்களின் கோரிக்கைகளை கேளுங்கள். அவர்கள் வைக்கின்ற கோரிக்கையை, உங்களால் செய்ய முடிந்ததை நீங்களே செய்து கொடுங்கள். அப்படி உங்களால் முடியவில்லை என்றால், முடியாதவற்றை உங்களின் சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் கவனத்திற்கு எடுத்துச் செல்லுங்கள்.

**வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!**

ஒருநாளில் குறைந்தது இரண்டு மணி நேரம் கழகத்திற்காக செலவிடுங்கள். நம் தலைவர் சொன்னதுபோல வார இறுதி நாட்கள் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு நாள் முழுக்க கழகத்தின் பணியில் ஈடுபடுங்கள். வாக்காளர் பட்டியலைச் சரி பார்ப்பது, நடுநிலையான வாக்காளர்களை நம் கழக ஆதரவாளர்களாக மாற்றுவது போன்ற பணியை நீங்கள் இன்றிலிருந்து துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்கான வழிகாட்டுதல்களை, தலைமைக் கழகமும், மாவட்டக் கழகமும் உங்களுக்கு வழங்கும். வாக்காளர்களை சந்திக்க, நாம் அதிகமாக செலவு செய்ய தேவையில்லை. பிரமாண்டம் எல்லாம் தேவையில்லை. மிகவும் சாதாரணமாக திண்ணைப் பிரச்சாரங்கள், சின்னச் சின்ன கருத்து அரங்கக் கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், உங்களால் முடிந்த அளவிற்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் இப்படி மிக எளிமையாகத் திட்டமிட்டு பொது மக்களை சந்தியுங்கள்.

களத்தில் எப்படி உழைக்கிறோமோ, இப்போது அதேபோல் சமூக வலைத்தளங்களிலும் நாம் துடிப்பாகச் செயல்பட வேண்டும். எல்லா ஊடகங்களும் உண்மையைச் சொல்லுமா என்று தெரியாது. ஆனால், நீங்கள் ஒவ்வொருவரும் ஊடகமாக மாறி, நம் கழகத்தின் சாதனைகளை, அரசின் செயல் திட்டங்களை, கழகத்தின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**2026-இல் 200 தொகுதிகள்!**

2026-ஆம் ஆண்டு தேர்தலில் நம் அணி 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறும் என்று நம் தலைவர் அவர்கள் உறுதிமொழி எடுத்திருக்கிறார். அந்த இலக்கை அடைய வேண்டும் என்றால், அந்த இலக்கு மட்டும்தான் நம் கண்களுக்குத் தெரிய வேண்டும். 2026-இல் நம் அணி நிச்சயம் 200 தொகுதிகளுக்கு மேல் வெல்ல வேண்டும் என்றால், அதற்கு சென்னை தெற்கில் இருக்கின்ற சைதாப்பேட்டை, விருகம்பாக்கம், மதுரவாயல், சோளிங்கநல்லூர், வேளச்சேரி என்று அத்தனை தொகுதிகளிலும் சென்ற தேர்தலை போல கழகம் மீண்டும் வென்று காட்ட வேண்டும். 200 தொகுதிகளுக்கு மேல் வெல்ல வேண்டும் என்றால் சென்னை தெற்கில் உள்ள அந்த ஐந்து தொகுதிகளில் இருந்து அதற்கான கணக்கை நாம் தொடங்க வேண்டும். அதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் 100 சதவிகிதம் அல்ல, 200 சதவிகிதம் உழைக்கத் தயாராக இருக்க வேண்டும்.

போரில் கும்பலாக சென்றால் வெற்றி பெற முடியாது. அணி அணியாக திட்டமிட்டு சென்றோம் என்றால், கண்டிப்பாக செல்கின்ற போரில் வெற்றிபெற முடியும். அதே போல் நாம் அணி அணியாகச் சென்று 2026 சட்டமன்ற தேர்தல் என்ற ஜனநாயகப் போரில் நிச்சயம் வென்று காட்ட வேண்டும். அந்த உறுதியோடு அடுத்து வருகின்ற ஒவ்வொரு நாளும் நம் பயணத்தை செயல்படுத்திக் கொள்வோம்.

**மிக முக்கியமான வருடம்!**

தேர்தல் பணிகளை முதலில் தொடங்கிய இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொன்னேன். எப்படி தேர்தல் பணிகளை முதலில் தொடங்கினோமோ, அதே போல் வாக்கு எண்ணிக்கையின் போதும் நம் அணி தான் முதலிடத்தில் வரவேண்டும் என்பதை நீங்கள் மனதில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நாம் பெயர்களில் வெவ்வேறு அணிகளாக செயல்பட்டாலும், நம் மனதில் இருக்க வேண்டியது ஒன்றே ஒன்றுதான். நம் குறிக்கோளும் ஒன்றே ஒன்றுதான். முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் வந்த நம் தலைவரின் அணிதான் இங்கு இருக்கின்ற அத்தனை அணிகளும் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். 2026 இல் ஏழாவது முறையாக நம் கழகம் ஆட்சியில் உட்கார வேண்டும். தொடர்ந்து இரண்டாவது முறையாக நம் கழக தலைவர் அவர்கள் முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், இங்கு வந்திருக்கின்ற அத்தனை அணிகளின் ஒவ்வொரு நிர்வாகிகளையும், ஒவ்வொரு அணிகளின் உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்வது, அடுத்து வருகின்ற ஒரு வருடம் மிக மிக முக்கியமான வருடம்.

நமக்குள் இருக்கின்ற சின்ன சின்ன மனக்கசப்புகளை மறந்து விட்டு, வெறும் தேர்தல் வெற்றி மட்டுமே நம் இலக்கு என்பதை நோக்கி பயணிப்போம் என்பதை கூறிக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறு கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்!**

மாவட்டக்கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்ரமணியன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன், மருத்துவர் கனிமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், பிரபாகர்ராஜா, காரப்பாக்கம் கணபதி, மாநகர துணை மேயர் சைதை மகேஷ் குமார், துரைராஜ், கிருஷ்ணமூர்த்தி, பெருங்குடி ரவிச்சந்திரன், மதியழகன், நொளம்பூர் ராஜன்,

மாநகராட்சி நிலைக்குழு தலைவர்கள் தனசேகரன், பாலவாக்கம் விசுவநாதன், பகுதிக் கழகச் செயலாளர்கள் துரை.கபிலன், சு.சேகர், கண்ணன், மு.ராசா, ஒன்றிய கழக செயலாளர்கள் வீரமணி, வெங்கடேசன், பாலவாக்கம் சோமு, அருணாச்சலம், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் வேளச்சேரி மணிமாறன், அடையாறு சபீல், பத்மப்ரியா, ரத்னா லோகேஸ்வரன்,

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், சந்திரபாபு, பாண்டிச்செல்வன், பரிதி இளம்சுருதி, வழக்கறிஞர் உமாகாந்தி, குணசேகர், பாலவாக்கம் மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி பாஸ்கர், அடையாறு பாலசுந்தரம், வி.ஜே.பாஸ்கர், வி.எம்.டி ராஜாராமன் வட்டக் கழகச் செயலாளர், விசாலாட்சி கபிலன், இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் விநாயக மூர்த்தி, சங்கர் கணேஷ், கிருஷ்ணகுமார், எழில் பாண்டியன், தியாகராஜன், ராமாபுரம் ரவி, கோட்டூர் பிரகாஷ், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் சந்துரு, ராகுல் உள்பட கழக முன்னணியினர், இளைஞர் அணியினர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

---

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பங்கேற்பு!

## தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா! கனிமொழி கருணாநிதி எம்.பி. விழாப் பேருரையாற்றுகிறார்!

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையில் நடைபெறுகிறது!

*சென்னை, பிப்.17-*

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா நாளை (18.2.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணியளவில் சென்னை-ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் அரங்கில் நடைபெற உள்ளது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கும் இவ்விழாவில், பேரவைச் செயலாளர், சிறுபான்மையினர் நல ஆணைய துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் வரவேற்புரையாற்றி இந்நிகழ்ச்சியினை தொகுத்து வழங்குகிறார்.

பேரவைத் தலைவரும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையுரையாற்றுகிறார்.

பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி, வட்டச் செயலாளர்கள் துரை பார்த்திபன், ப.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று விழாப் பேருரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பேரவைத் துணைத் தலைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இவ்விழாவில் பேரவைத் துணைத் தலைவர் எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம், பேரவைச் செயலாளர்கள் பொள்ளாச்சி மா.உமாபதி, திருவாரூர் அர.திருவிடம், வண்ணை அரங்கநாதன், என். தில்லை செல்வம், பேரவைத் துணைச் செயலாளர்கள் வீரகணேசன், கவிஞர் நன்மாறன், திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், கே.வி.குப்பம் சி.கோபி, கலைமாமணி அ.ஜாகிர் உசேன் உள்ளிட்ட பேரவை நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட பேரவை அமைப்பாளர் ச.சண்முகநாதன் நன்றி கூறுகிறார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் தொகுதி அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பாக முகவர்கள் கூட்டம் எலப்பாக்கம், எல் எண்டத்தூர்ண, மொறப்பாக்கம், வேடந்தாங்கல் ஆகிய பகுதிகளில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி.தம்பு ஏற்பாட்டில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம் எல் ஏ, மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் எம். டி. ஆர்.சாரதி மணிமாறன் கலந்து கொண்டு வாக்குச்சாவடி முகவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.நாராயணன், திமுக நிர்வாகிகள் மொ.கோ.மணி, கலியுக கண்ணதாசன், வேணு, பிரபாகர், இளங்கோ, கருணாகரன், வெங்கடேசன்,ராஜகோபால், பிரேம், தேவ், தசரதன், வேதாச்சலம், சிலம்பரசன், ராமதாஸ்,உள்ளிட்ட திமுகவினர் பலர் கலந்து கொண்டனர்.

---

அமைச்சர் எஸ்.முத்துசாமி தலைமையில் இன்று

## பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை!

### ஈரோடு மத்திய மாவட்டப் பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் அணிவிக்கிறார்!

*ஈரோடு, பிப். 17 -*

அமைச்சர் எஸ்.முத்துசாமி தலைமையில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச்சிலைக்கு ஈரோடு மடத்திய மாவட்ட பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலம் மாலை அணிவிக்கிறார்.

இது குறித்து தோப்பு என்.டி.வெங்கடாசலம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



திராவிட மாடல் நாயகன், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க இரண்டு சட்டமன்ற தொகுதிக்கு ஒரு மாவட்டம் என்ற அடிப்படையில் பெருந்துறை மற்றும் பவானி சட்டமன்ற தொகுதிக்கு புதிய மாவட்ட கழக பொறுப்பாளராக முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் நியமிக்கப்பட்டுள்ளார். அதன் முதல் நிகழ்வாக இன்று (17.2.2025 திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு பெருந்துறையில் உள்ள அண்ணா சிலைக்கு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செய்ய உள்ளார்.

அது சமயம் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், BLA 2 மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி. வெங்கடாசலம் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



கழகத்தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கழக அணிகள் உட்பட 20 அணிகள் பங்கேற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டி சென்னை சேப்பாக்கம் மெரினா மைதானத்தில் நடைபெற்ற போட்டியினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணியினருக்கு, வெற்றி கோப்பைகள் வழங்கி வாழ்த்தினார். இதில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா , மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன், ஆகியோர் உடனிருந்தனர்.